மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். .. CC 12/2022

பெயர் .. காளியப்பன் (PW1)

த/பெ. க/பெ ..

கிராமம் ..

தாலுகா ..

Calling ..

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the 3rd day of November 2022

**<u>முதல் விசாரணை</u>**

1. எனக்கு வெங்கடேஷ்வபுரம் ஆகும். நான் கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன மாலா என் மனைவி மற்றும் வெள்ளைச்சாமி என் மகன் ஆகும். எனது மூத்த மகன் பெயர் ஆகாஷ் ராஜ்ற்கு வலிப்பு நோய் இருந்தது. அதற்கு மருந்து வாங்குவதற்காக 06.02.2022 ம் தேதி 8.20 மணிக்கு எங்கள் ஊரில் இருந்த டிவிஎஸ் எக்சல் வண்டி பதிவு எண். TN69AA9037 என்ற வாகனத்தை நான் ஓட்ட எனக்கு பின்னால் என் மனைவி மற்றும் மகன் இருந்தனர்.

2. குறுக்குசாலை ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்காக செல்ல ரோட்டின் இடதுபுறமாக வந்து கொண்டிருந்த போது கே. சண்முகபுரம் பஸ்ஸடாப் அருகில் தனியார் பேருந்து எதிரில் வந்து கொண்டிருந்தது எனது பின்னால் வந்த அரசு பேருந்து TN 68N0713 என்ற பேருந்து ஹார்ன் அடிக்காமல் ரோட்டின் ஓரமாக நின்ற எனது வண்டியின் பின்புறம்

இடித்ததில் நான் இடது புறம் விழுந்தேன், எனது மனைவி மற்றும் மகன் வலது புறம் விழுந்ததில் பேருந்தின் பின்பக்க சக்கரம் தலையில் ஏறியதில் மூளை சிதைந்தது. அவர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துபோனார்கள்.

3. நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் (அது **அ.சா. ஆ. 1 ஆக குறியீடு செய்யபடுகிறது**.)அன்றைய தினம் அரசு பேருந்தை ஓட்டி வந்தது ஆஜர் எதிரிதான். எதிரியின் கவனக்குறைவினால்தான் விபத்து ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இல்லை

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்) A.ஜெயந்தி
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.